சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 6/2016

பெயர் திரு. வேதகிரி நாள். 06.11.2025
த/பெ. சொக்கலிங்கம்

**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதிகளின் தாயார் காமாட்சி தேவி, அவருடன் பிறந்த சகோதரர்கள் சீனிவாசன், காமாட்சி சிறிய தகப்பனார் மகன்கள் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆகியோர் 26.10.2006 அன்று 4ம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தை கிரயம் கொடுத்ததால் ஏற்பட்ட வழக்குதான் இவ்வழக்கு என்றால் சரிதான். காமாட்சி தேவி 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தில் கையொப்பம் செய்தார். காமாட்சி தேவியின் பிள்ளைகள் எப்பொழுது கிரய ஆவணத்தில் உள்ள கையொப்பம் பற்றி கேட்டார்கள் என்று எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் பற்றி காமாட்சி தேவி சொல்லி எனக்கு தெரியும். காமாட்சி தேவி தான் தன் பிள்ளைகளை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பிள்ளைகள் போட்டுள்ளார்கள் என்பது மட்டும் தான் தெரியும். 4ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய 2006ம் ஆண்டு முதல் பட்டா மாற்றம் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். ஏற்கனவே வாதிகள் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி எனக்கு தெரியாது. வாததிகள் வழக்குரையில் வழக்குச் சொத்தில் உள்ள மரங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.